**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி**

**முன்னிலை : திருமதி. K. பாரதி , M.L.,**
**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பழனி.**

**2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13 ஆம் நாள் புதன்கிழமை**

**இ.ம.எண். 4/2023**

**இன்**

**அ.வ.எண்.200/2022**

A. பிரபாகரன் --- மனுதாரர்/வாதி

/எதிர்/

1. M. அர்ச்சுணன்
2. 1நிர் இணை சார்பதிவகம், பழனி
3. மாவட்ட பதிவாளர், பழனி --- எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

4. துர்கா
5. சத்தியசீலன் --- புதிதாக சேர்க்கவேண்டிய 4, 5 பிரதிவாதிகள்

இந்த மனுவானது 05.02.2024 ஆம் தேதியன்று என் முன்னர் இறுதி விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திருவாளர்கள் V. இராஜமாணிக்கம் மற்றும் V. பச்சைமுத்து ஆகியோர் ஆகியோர் முன்னிலையாகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகள் மற்றும் புதிதாக சேர்க்கவேண்டிய 4, 5 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர் A.சுரேந்திரன் அவர்கள் முன்னிலையாகியும், 3-ம் எதிர்மனுதாரர்/3-ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

இம்மனுவில் கண்டுள்ள காரணங்களுக்காக பிரதிவாதிகளுடன் மேற்படி துர்கா மற்றும் சத்தியசீலன் என்பவர்களையும் வழக்கில் 4, 5 பிரதிவாதிகளாக சேர்த்து வழக்கை மேல்நடத்த உத்தரவிடக்கோரி சி.பி.சி. ஆர்டர் 1 ரூல் 10(2) மற்றும் பிரிவு 151-ன்படி மனுதாரரால் இம்மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டின் சுருக்கம்:-**

மனுதாரார் அசல் வழக்கில் வாதி, அசல் வழக்கானது பாகப்பிரிவினை மற்றும் தனிசுவாதீனம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்குச் சொத்துக்களை 1ம்

பிரதிவாதியானவர் சத்தியசீலன் என்பவருக்கு 8.10.2021 அன்று செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்த விபரம் தற்போது தான் தெரியவந்தது. பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட இடைமனுவின் அவருக்கு துர்கா, சத்தியசீலன் என்ற இரு மக்கள் இருப்பதாக தெரிவித்துள்ளார். அதனால் அசல் வழக்கில் 4 மற்றும் 5 எதிர்மனுதாரர்களை தரப்பினர்களாகச் சேர்த்து உத்தரவிட வேண்டும்.

**3. புதிதாக சேர்க்கப்படவேண்டிய 4, 5 எதிர்மனுதாரர்கள்/4, 5 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்உரையின் சுருக்கம் பின்வருமாறு :-**

தாவா சொத்தானது எதிர்மனுதாரர்களின் பரம்பரை சொத்தாகும். எதிர்மனுதாரர்களின் தகப்பனார் அர்சுணன் அவரது சகோதரர் மதியழகன், சகோதரிகள் பேச்சியம்மாள், தங்கப்பிள்ளை என்ற பர்வதம் ஆகியோருக்குப் பாத்தியப்பட்டதாகும். பேச்சியம்மாள் சொத்துரிமை கோரி தாக்கல் செய்த அ.வ.எண்.289/2018 வழக்கில் சமரசம் ஏற்பட்டு தாவா சொத்தானது பாலமுருகன், ஜெயராம் குப்தா, வெங்கடேசன், அனந்தபத்மநாபன், நாகராஜன் ஆகியோருக்கு விற்கிரையம் செய்யப்பட்டுள்ளது. எந்த உரிமையும் இல்லாத மனுதாரர் இவ்வாறான மனுவைத் தாக்கல் செய்துள்ளது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. அசல் வழக்கை காலதாமதம் செய்ய வேண்டும் என்ற தீய எண்ணத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்து யாரிடம் உள்ளது, யாருக்கு விற்கப்பட்டுள்ளது என்ற விபரம் தெரியாமல் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனு தள்ளுபடியாக வேண்டும்.

4. இந்த மனுவில் இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியங்கள் விசாரிக்கப்படவில்லை. இருதரப்பிலும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5. இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்னவென்றால், இந்த மனு அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

**6. தீர்வு:-**

6.1. மனு, எதிருரை மற்றும் வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர் தரப்பில் அர்சுணன் என்பவருக்கு 4 மற்றும் 5 எதிர்மனுதாரர்கள் மக்கள் என்றும் 5-ம் எதிர்மனுதாரர் சத்தியசீலன் என்பவருக்கு 8.10.2021 அன்று செட்டில்மெண்ட் ஆவணத்தை அர்சுணன் எழுதி வைத்த சங்கதி தற்போது தான் மனுதாரருக்குத் தெரிய வந்தது என்றும், எனவே 4 மற்றும் 5 எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் 4 மற்றும் 5 பிரதிவாதிகளாக அசல் வழக்கில் சேர்க்க வேண்டும் என்று வாதிடப்பட்டது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரருக்கு தாவா சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை என்றும், மனுச்சொத்தானது எதிர்மனுதாரர்களின் பரம்பரை சொத்து என்றும், அர்சுணனுக்கு மதியழகன் , பேச்சியம்மாள், தங்கப்பிள்ளை என்ற பர்வதம் ஆகியோர் உடன் பிறந்தவர்கள் என்றும், பேச்சியம்மாள் சொத்துரிமை கோரி அ.வ.எண்.289/2018 என்ற

வழக்கை தாக்கல் செய்து அதில் சமரசம் ஏற்பட்டு தாவா சொத்தானது பாலமுருகன் உள்ளிட்ட நபர்களுக்கு விற்கிரையம் செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவித்து வாதிடப்பட்டது.

6.2. எவ்வாறிருப்பினும் 1ம் பிரதிவாதியின் மக்கள் என்ற அடிப்படையில் 4 மற்றும் 5 எதிர்மனுதாரர்களை வழக்கில் பிரதிவாதிகளாக சேர்த்து வழக்கை நடத்த மனுதாரர் தரப்புக்கு வாய்ப்பு வழங்க வேண்டும் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

7. முடிவாக இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் ஒப்பெழுதப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13 ஆம் நாளாகிய இன்று பகரப்பட்டது.

K BHARATHI
Digitally signed by K BHARATHI
Date: 2024.03.14 15:04:27 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**

**பழனி.**

| | | |
|---|---|---|
| **மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்** | : | இல்லை |
| **எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்** | : | இல்லை |

K BHARATHI
Digitally signed by K BHARATHI
Date: 2024.03.14 15:04:32 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**

**பழனி.**